# மார்ச் - 13 - செவ்வாய்

## தூய ரிக்ஸி கத்தரின்

## “அது பாயும் இடமெல்லாம் உயிர்வாழும்” (எசேக்.47:9)

**முதல் வாசகம் : ஏசேக்கியல் 47 : 1 – 9, 12**

அக்காலத்தில் வானதூதர் என்னைக் கோவிலின் நுழைவாயிலுக்கு மீண்டும் அழைத்து வந்தார். அங்கு நான் கோவிலின் வாயிற்படியின் கீழிருந்து கிழக்கு நோக்கித் தண்ணீர் வருவதைக் கண்டேன். ஏனெனில், கோவில் கிழக்கு நோக்கி இருந்தது. தண்ணீர், கோவில் மற்றும் பீடத்தின் தெற்குப் பக்கத்திலிருந்து வந்தது. அவர் என்னை வடக்கு வாயில் வழியாய் அழைத்து வந்து கிழக்கு நோக்கிய வெளிவாயிலின் வெளிப்பகுதிக்கு இட்டுச் சென்றார். இதோ! தண்ணீர் தெற்குப் பகுதியிலிருந்து பாய்ந்து கொண்டிருந்தது. அம்மனிதர் கையில் ஓர் அளவு நூலைப் பிடித்துக்கொண்டு கிழக்கு நோக்கிச் சென்று, ஆயிர முழம் அளந்தார். பின்னர் கணுக்காலளவு ஆழமுள்ள அத்தண்ணீர் வழியாய் என்னை அழைத்துச் சென்றார். அவர் மேலும் ஆயிர முழம் அளந்து என்னை முழங்காலளவு ஆழமுள்ள தண்ணீரில் அழைத்துச் சென்றார். மேலும் ஆயிர முழம் அளந்து இடுப்பளவு தண்ணீரில் என்னை நடத்திச் சென்றார். அவர் மேலும் ஆயிர முழம் அளந்தார். ஆனால் இப்போது அது ஆறாக ஓடியது. எனவே என்னால் அதைக் கடக்க இயலவில்லை. ஏனெனில் தண்ணீர் உயர்ந்து நீந்திப்போகுமளவுக்கு ஆழமுடையதாய், யாராலும் நடந்து கடக்க முடியாத ஆறாய் ஓடியது. அவர் என்னிடம் ”மானிடா! இதைப் பார்த்தாயா?” என்றார். பின்னர் அவர் என்னை ஆற்றின் கரைக்கு அழைத்துச் சென்றார். நான் அங்கே சென்றபோது ஆற்றின் இரு கரைகளிலும் எண்ணற்ற மரங்கள் நிற்கக் கண்டேன். அவர் என்னிடம் உரைத்தது ”இத் தண்ணீர் கிழக்குப் பகுதியை நோக்கிப் பாய்ந்து அராபாவில் சேர்கிறது. அங்கு அது கடலோடு கலக்கிறது. அது கடலோடு கலக்கையில் அத்தண்ணீர் அங்கு நல்ல தண்ணீராக மாறும். இந்த ஆறு பாயுமிடமெல்லாம் திரளான உயிரினங்கள் வாழும். அங்கு ஏராளமான மீன்கள் இருக்கும். ஏனெனில் இத்தண்ணீர் பாய்ந்து அங்குள்ள நீரை நல்ல நீராய் மாற்றும். எனவே அது பாயுமிடமெல்லாம் யாவும் உயிர் வாழும். பலவகையான பழமரங்கள் ஆற்றின் இருமருங்கிலும் வளரும் அவற்றின் இலைகள் உதிரா அவற்றில் கனிகள் குறையா. ஒவ்வொரு மாதமும் அவை கனி கொடுக்கும் ஏனெனில் தூயகத்திலிருந்து தண்ணீர் அவற்றிற்குப் பாய்கின்றது. அவற்றின் கனிகள் உணவாகவும் இலைகள் மருந்தாகவும் பயன்படும்

**பதில்பாடல் :** ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் நம் அரணாயும் இருக்கிறார்

**நற்செய்தி : யோவான் 5 : 1 – 16**

அக்காலத்திலவ் யூதர்களின் திருவிழா ஒன்று வந்தது. இயேசுவும் எருசலேமுக்குச் சென்றார். எருசலேமில் ஆட்டு வாயிலுக்கு அருகில் ஐந்து மண்டபங்கள் கொண்ட குளம் ஒன்று உண்டு. எபிரேய மொழியில் பெத்சதா என்பது அதன் பெயர். இம்மண்டபங்களில் உடல்நலமற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர், முடக்குவாதமுற்றோர் ஆகியோர் திரளாய்ப்படுத்துக ்கிடப்பர். (இவர்கள் குளத்து நீர் கலங்குவதற்காகக் காத்திருப்பார்கள். ஏனெனில் ஆண்டவரின் தூதர் சில வேளைகளில் அக்குளத்தினுள் இறங்கித் தண்ணீரைக் கலக்குவார். தண்ணீர் கலங்கியபின் முதலில் இறங்குபவர் எவ்வித நோயுற்றிருந்தாலும் நலமடைவார்.) முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல்நலமற்றிருந்த ஒருவரும் அங்கு இருந்தார். இயேசு அவரைக் கண்டு, நெடுங்காலமாக அவர் அந்நிலையில் இருந்துள்ளதை அறிந்து, ”நலம்பெற விரும்புகிறீரா?” என்று அவரிடம் கேட்டார். ”ஐயா, தண்ணீர் கலங்கும் போது என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை. நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கிவிடுகிறார்” என்று உடல் நலமற்றவர் அவரிடம் கூறினார். இயேசு அவரிடம், ”எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்” என்றார். உடனே அம்மனிதர் நலமடைந்து தம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்தார். அன்று ஓய்வு நாள். யூதர்கள் குணமடைந்தவரிடம், ”ஓய்வு நாளாகிய இன்று படுக்கையை எடுத்துச் செல்வது சட்டத்திற்கு எதிரான செயல்” என்றார்கள். அவர் மறுமொழியாக ”என்னை நலமாக்கியவரே, ”உம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துசெல்லும்” என்று என்னிடம் கூறினார்” என்றார். ”படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்” என்று உம்மிடம் கூறியவர் யார்?” என்று அவர்கள் கேட்டார்கள். ஆனால் நலமடைந்தவருக்கு அவர் யாரெனத் தெரியவில்லை. ஏனெனில் அவ்விடத்தில் மக்கள் கூட்டமாய் இருந்ததால் இயேசு அங்கிருந்து நழுவிப் போய் விட்டார். பின்னர் இயேசு நலமடைந்தவரைக் கோவிலில் கண்டு, ”இதோ பாரும், நீர் நலமடைந்துள்ளீர் இதைவிடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர்” என்றார். அவர் போய், தம்மை நலமாக்கியவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தார். ஓய்வுநாளில் இயேசு இதைச் செய்ததால் யூதர்கள் அவரைத் துன்புறுத்தினார்கள்.

**தியானம்:** கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் நாடி நிற்கும் மக்களை அவர் தேடிச்சென்று வாழ்வளிக்கின்றார் என்பதனை இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் தெளிவுபடுத்துகின்றன. முதல் வாசகத்தில் கோவிலில் இருந்து பாய்ந்துவரும் தண்ணீரின் காட்சி நமக்குத் தெரிகின்றது. தண்ணீருக்குள் இறங்கிச் செல்ல எசேக்கியேல் இறைவனால் அழைக்கப்படுகின்றார். எசேக்கியேலும் தன்னை முற்று முழுதாய் ஒப்புக் கொடுத்தவராய் தண்ணீருக்குள் இறங்கிச் செல்கின்றார். நாமும் கடவுள் பக்கம் திரும்ப வேண்டுமென அவர் எம்மை அழைக்கின்றார். எம்மை நோக்கி பாய்ந்து வரும் அருள் வெள்ளத்தில் மூழ்கி நலம் பெற அழைக்கப்படுகின்றோம். 38 ஆண்டுகளாக எருசலேமில் பெத்சாயிதா குளத்தருகே படுத்துக் கிடந்தவரை நோக்கி இயேசு “எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நமந்து செல்லும்” என்று கூறி நலமளித்தார். இன்று இறைவார்த்தைகளைத் தியானிக்கும் நாமும் அருளின் ஊற்றாகிய இயேவுக்கிறிஸ்துவின் மூலம் பெறுவோம். நம்மைச் சுற்றி வறுமையிலும், தனிமையிலும், நோயிலும் வாடுவோருக்கு அவரது வாழ்வு தரும் நீரை வடிந்தோடச் செய்யும் வாய்க்கால்களாய் மாறுவோம்.